நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## இன்று மழை பெய்ய வாய்ப்பு

First Published : 27 Jun 2012 02:26:02 AM IST

சென்னை, ஜூன் 26: தமிழகத்தின் சில பகுதிகளில் புதன்கிழமை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுச்சேரியின் சில பகுதிகளில் பரவலான மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையைப் பொறுத்தவரையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரியை ஒட்டியிருக்கும்.

செவ்வாய்க்கிழமை பதிவான மழை (காலை 8.30 மணி நிலவரப்படி): புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் - 4 செ.மீ., நீலகிரி மாவட்டம் கேத்தி - 3 செ.மீ., குன்னூர், புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் - 2 செ.மீ., கொடைக்கானல் - 1 செ.மீ.

## ஜூன் 29 மீனவர் குறைதீர் கூட்டம்

First Published : 26 Jun 2012 03:30:16 PM IST

நாகர்கோவில், ஜூன் 25:நாகர்கோவிலில் மீனவர் குறைதீர்க்கும் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஜூன் 29) நடைபெறுகிறது.

இதுகுறித்து மீன் வளத்துறை உதவி இயக்குநர் ரூபர்ட் ஜோதி திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இம்மாதம் 29-ம் தேதி காலை 10.30 மணிக்கு மீனவர் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறுகிறது. ஆட்சியர் எஸ். நாகராஜன் தலைமை வகிக்கிறார். மீன்வளத் துறை மற்றும் இதர துறைகளால் நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை ஆட்சியரிடம் நேரில் வழங்கலாம். பெறப்படும் மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் அவர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

நவீன தொழில்நுட்பம்

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2012,00:00 IST



*இறைச்சி மற்றும் முட்டைக்கோழிகளின் உடல்சோர்வை நிவர்த்தி செய்தல்*

**சோர்வு ஏற்படுவதற்கான காரணங்கள்**: கோழியைப் பிடித்து கையாளுதல், கோழியை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லுதல், திடீரென்று ஏற்படும் வெப்பநிலை மாற்றம், தடுப்பூசி, தீனியின் தரம், பூஞ்சைக்காளான் தீனியில் வளர்வதால் அதிக நெருக்கடி, மூக்கு வெட்டுதல் ஆகியவைகளாகும். கீழ்வரும் காரணிகளைச் சரிசெய்தால் வெப்ப அயற்சியைத் தடுக்கலாம்.

**அமிலக்காரச் சமன்பாட்டை ஒரே சீராக வைத்தல்**: வெப்ப அயற்சியின் காரணமாக அதிக மூச்சுவிடுவதால் கார்பன்டை ஆக்சைடு அதிகமாக வெளியேறி அதனால் அமிலக்காரச் சமன்பாடு மாறுபடுகிறது. அம்மோனியம் குளோரைடு, பொட்டாசியம் குளோரைடு, சோடியம் குளோரைடு, சோடியம் பை கார்பனேட் மற்றும் சோடியம் சிட்ரேட் போன்றவற்றை தீனியிலோ, வேறு

வகையிலோ தேவைக்கேற்ப சேர்ப்பதால் வெப்ப அயற்சியின் தாக்கத்தை நிவர்த்தி செய்யலாம்.
**தண்ணீர் பராமரித்தல்:** வெப்பத்தைக் குறைக்கும் வெவ்வேறு வகையான உப்பை தண்ணீரில் சேர்த்து கொடுப்பதால் தண்ணீரை அதிகமாக குடித்து தண்ணீரின் அளவை உடலில் சமச்சீராக வைத்துக்கொள்கிறது. வெப்ப அயற்சி நேரத்தில் பொட்டாசியம் குளோரைடை தண்ணீரில் கலந்து கொடுப்பதால் அதன் உற்பத்தி உயர்வது மட்டுமல்லாமல் சீரம் புலால் நீரிலுள்ள கார்டிகோஸ்டீரான் அளவைக் குறைத்து கோழியின் உடலிலுள்ள தண்ணீரின் அளவை ஒரே சீராக வைத்து உடல் வெப்பநிலையை ஒரே சீராக வைத்துக் கொள்கிறது. தண்ணீரில் பொட்டாசியம் குளோரைடை சேர்த்துக் கொடுப்பதன் மூலம் தீனி உட்கொள்ளும் அளவு அதிகமாகி உடல் வளர்ச்சி அதிகமாகிறது. மேலும் உடல் வெப்பநிலையைவிட தண்ணீரின் வெப்பநிலையை குறைத்துவிடுகிறது.
குடிதண்ணீரின் வெப்பநிலை குறையும்பொழுது முட்டைக்கோழிகளின் தீனி உட்கொள்ளும் அளவு, முட்டை ஓட்டின் தடிமன், முட்டை எடை, முட்டை உற்பத்தி அதிகமாகிறது.
கறிக்கோழியின் முடி உதிர்வை தடுத்து நிறுத்துகிறது.
**ஊட்டச்சத்தை பராமரித்தல்**: ஒவ்வொரு டிகிரி செல்சியஸ் வெப்பநிலை உயரும்பொழுது முட்டைக்கோழிகளில் 1.5 சதம் தீனி உட்கொள்ளும் அளவு குறைகிறது. (21 - 32 டிகிரி செ. வரை) தீனி உட்கொள்ளும் அளவு எப்போதும் ஒரே சீராக இருப்பதில்லை. வெப்பநிலை உயரும்போது எரிசக்தி அளவு குறைவாக தேவைப்படுகிறது. ஆகையால் உடலை ஒரே சீராக வைக்க வெப்பமான காலங்களில் கறிக்கோழிகளுக்கு அதிக எரிசக்தி கலவை வெப்பமான இடங்களில் பயன்படுத்த வேண்டும்.
வெப்பமான காலங்களில் அஸ்கார்பிக் அமிலத்தை 200 மி.கி/ கிலோ என்ற அளவில் தீனியில் சேர்த்து கொடுக்கும்பொழுது வெப்பத்தை எதிர்த்து அதனால் ஏற்படும் இறப்பைக் குறைக்கிறது. முட்டைக் கோழிகளுக்கு இக்காலங்களில் வைட்டமின் சியைக் கொடுக்கும் பொழுது முட்டை எடை, முட்டை ஓட்டின் தடிமன் மற்றும் முட்டை உற்பத்தியை அதிகரிக்கச் செய்கிறது.
தாது உப்புக்களான கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியத்தின் முக்கியத்துவம்: வெப்ப அயற்சி காலங்களில் கால்சியமானது மற்ற தாது உப்புக்களைவிட அதிக முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில் சுற்றுப்புற வெப்பநிலையால் முட்டை எடை மற்றும் முட்டை ஓட்டின் தடிமன் குறைகிறது. வெப்பமான காலங்களில் முட்டையின் தரத்தை உயர்த்த கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

* தீனியில் சோடியம் பை கார்பனேட்டைச் சேர்க்கலாம்.
* சிப்பி அல்லது மற்ற கால்சியம் சத்து கொடுக்கக்கூடியவற்றைத் தனியாக உபயோகித்தால் நல்ல பயனாக இருக்கும்.
* இரவு நேரக் குளிர்ச்சி நல்ல பலனைக் கொடுக்கும்.
* சோடாத் தண்ணீரைக் கொடுத்தால் நல்ல பயனாக இருக்கும்.

* அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப் பதத்தினால் முட்டை எடை, முட்டை ஓட்டின் எடை மற்றும் முட்டை ஓட்டின் மூலப்பொருட்களைக் குறைக்கிறது. அதிக வெப்பமான காலங்களில் கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் விகிதம் மிக மிக முக்கியம். அதிக பாஸ்பரசினால் முட்டை ஓட்டின் தரம், முட்டை ஓட்டின் தடிமன், முட்டை எடை போன்றவை வெப்பமான காலங்களில் குறைகிறது. (**தகவல்**: ச.மால்மருகன், ஜே.ஜான்சன் ராஜேஷ்வர், நுண்ணுயிரியல் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

## வெள்ளாடுகளுக்கான விற்பனை வாய்ப்புகள்

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2012,00:00 IST



*விற்பனை என்றால் என்ன:* விற்பனை என்பது பொதுவாக உற்பத்தியாளர்களின் மிக முக்கிய கடைசி நடவடிக்கையாகும். விற்பனை, உற்பத்தியாளர்களின் உழைப்புக்கும் மூலதனத்திற்கும் லாபம் அல்லது நட்டம் ஏற்படுவதை நிர்ணயம் செய்யும் செயலாகும். நுகர்வோர்களின் தேவைகளையும் விருப்பத்தையும் பூர்த்திசெய்யும் வகையில் செயல்படுத்தப்படும் மனித நடவடிக்கையாகும்.

இறைச்சிப் பொருட்களின் விற்பனை பல செயல்பாடுகளை உள்ளடக்கியதாகும். அவை முறையே உற்பத்தி செய்யுமிடத்திலிருந்து கொண்டுவந்து இறைச்சியாக மாற்றப்படும் இடத்தில் சேர்க்க வேண்டும். நுகர்வோர்களின் தேவைக்கேற்ப இறைச்சிப் பாகங்களாகவும் மதிப்பூட்டிய இறைச்சிப் பொருளாகவும் மாற்ற வேண்டும். நுகர்வோர்களுக்குத் தேவைப்படும் இடத்தில், தேவையான அளவில் மற்றும் தேவையான தரமுள்ள இறைச்சியை அளித்திட வேண்டும். இறைச்சிப் பொருட்களின் விற்பனை என்பது உற்பத்தியாளர் களிடமிருந்து கடைசியாக நுகர்வோர்களைச்

சென்றடையும் இடமாகச் சில்லறை வியாபாரிகள் வரையிலான எல்லா வழித்தடங்களையும் உள்ளடக்கியதாகும். மாறிவரும் சூழ்நிலைகள், போக்குவரத்து வசதிகள், குளிர்பதன முறைகள் போன்றவை இறைச்சிப் பொருட்களின் விற்பனை முறையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. நவீன குளிர்பதன முறைகள் மற்றும் நவீன பாதுகாப்பு முறைகள் இறைச்சிப் பொருட்கள் ஆண்டு முழுவதும் கிடைக்குமாறு உதவுகின்றன.

விற்பனை இடையீட்டாளர்கள்: இறைச்சிப் பொருள் விற்பனையில் பல இடையீட்டாளர்கள் பங்கேற்கின்றனர். இவர்கள் உற்பத்தியாளர்கள் தயார் செய்யும் இறைச்சிப் பொருட்களை நுகர்வோரிடம் சுமூகமாகச் சென்றடைய வழிவகை செய்கின்றனர்.

மொத்த வியாபாரிகள், சிறு வியாபாரிகள் (சில்லறை வியாபாரிகள்), தரகர்கள் (தரகு வியாபாரிகள், வியாபாரத் தரகர்கள்), முகவர்கள், போக்குரவத்து நிறுவனங்கள், பண்டகசாலை (கிடங்குகள்), நிதி நிறுவனங்கள், சட்ட அமைப்புகள் (ஆலோசனைகள்) விளம்பர நிறுவனங்கள் முதலியன இறைச்சி விற்பனையில் இடையீட்டாளர்கள் ஆவர். இந்த இடையீட்டாளர்கள் வியாபாரிகளைத் தேடுதல், நுகர்வோர்களைக் கண்டறிதல், இறைச்சிப் பொருட்களை எடுத்துச்செல்ல போக்குவரத்து வசதிகள், சேமிப்புக் கிடங்குகள், தகவல் தொடர்புகள் ஏற்படுத்திக் கொடுத்தல், பேரம் பேசி ஒப்பந்தம் செய்தல், உரிமம் மாற்றம் செய்தல் முதலிய பணிகளை செவ்வனே செய்கின்றனர். ஆகவே, இறைச்சிப் பொருட்களின் விற்பனையிலும் இதர பொருட்கள் விற்பனை போல் இடையீட்டாளர்கள் சேவை அவசியமாகிறது. இவர்களது சேவையை அறவே அகற்ற முடியாது.

விற்பனை வழிமுறைகள்: இறைச்சிப் பொருட்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து கடைசியாக நுகர்வோர்

களைச் சென்றடையும் வழிதான் விற்பனை வழிமுறை எனப்படும். இதில் பலதரப்பட்ட இடையீட்டாளர்கள் பங்கேற்கின்றனர். கீழ்க்காணும் வழிமுறைகளில் இறைச்சிப் பொருட்கள் விற்பனையாகின்றன.

* இறைச்சி உற்பத்தியாளர்கள் - மொத்த வியாபாரி - இறைச்சிப் பொருட்கள் - தயாரிப்பாளர்கள் - சிறு/சில்லறை வியாபாரி - நுகர்வோர்
* இறைச்சி உற்பத்தியாளர்கள் - மொத்த வியாபாரி - உணவு விடுதி / விரைவு சிற்றுண்டி - நுகர்வோர்.
* இறைச்சி உற்பத்தியாளர்கள் - மொத்த வியாபாரி - இறைச்சிப் பொருட்கள் தயாரிப்பாளர்கள் - சங்கிலி/தொடர் கடைகள் - நுகர்வோர்.
* இறைச்சி உற்பத்தியாளர்கள் - ஒருங் கிணைப் பாளர்கள் - இறைச்சிப் பொருட்கள் - தயாரிப் பாளர்கள் - சிறு /சில்லறை வியாபாரி - நுகர்வோர்.
* இறைச்சி உற்பத்தியாளர் மற்றும் இறைச்சிப் பொருட்கள் தயாரிப்பாளர் - சிறு/சில்லறை வியாபாரி - நுகர்வோர்

* இறைச்சி உற்பத்தியாளர் - நுகர்வோர் .(தகவல்: முனைவர் செல்வராஜ், 0421-224 8524).- கே.சத்தியபிரபா, உடுமலை.

## அற்புத கால்நடை தீவனம் அசோலா

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2012,00:00 IST



ஆடு, மாடு, கோழி, முயல், மீன், பன்றி போன்ற கால்நடைகளுக்கு செலவில்லாத அற்புத தீவனமாகவும், மனிதர்களுக்கு மிகச்சிறந்த உணவாகவும், அனைத்து உயிர்களுக்கும் உணவு கொடுத்து வாழ வைக்கும் தாயாக விளங்கும் தாவரங்களுக்கு உன்னதம் மிகுந்த உயிர் உரமாகவும் அமைந்து வளம் தரக்கூடிய ஆதி தாவரமாகிய அசோலா என்னும் நீலப்பச்சைப்பாசி நீரில் வளரும் பாசி வகையாகும்.

செலவின்றி வளரும் அசோலாவை மாடுகளுக்கு தீவனமாக கொடுக்கலாம். ஒரு மாட்டிற்கு ஒரு நாளைக்கு 2 கிலோ வரை கொடுக்கலாம். இதன் காரணமாக 2 லிட்டர் பால் கூடுதலாக கிடைக்கும். புண்ணாக்கு, தவிடு, பருத்திக் கொட்டை போன்ற தீவனங்களின் அளவை பாதியாக குறைத்துக் கொடுக்கலாம். மாடுகளின் சினைபிடிப்பு தன்மை மேம்படும். இதேபோல ஆடு, கோழி, மீன், முயல், பன்றி என அனைத்து கால்நடைகளுக்கும் செலவில்லாத தீவனமாக பயன்படுத்தி வளம் காண்பதுடன் அதிக வருமானமும் பெறலாம்.

அசோலா வளர்க்க தேவையான பொருட்கள் எவை என பார்ப்போம். பாலிதீன் சீட் 2 மீட்டர் அகலம், 4 மீட்டர் நீளம் கொண்டதாக இருக்க வேண்டும். இதன் அளவு சிறிது கூட குறைய அமையலாம். பாலிதீன் சீட்டின் பரப்பளவில் ஒரு அடி நீள அகலம் குறைவான அளவில் அரை

அடி உயரத்தில் மண் மூலமோ அல்லது செங்கல் மூலமோ பாத்தி அமைத்து, அதன் மீது பாலிதீன் சீட்டினை விரித்து பரப்ப வேண்டும். இப்பொழுது அரை அடி உயர தொட்டி போன்ற அமைப்பு கிடைத்துவிடும். இந்த பாலிதீன் தொட்டியினுள் ஒரு இன்ச் உயரம் அளவில் தோட்டத்து மண்ணைக் கொட்டி பரப்ப வேண்டும். 3 இன்ச் அளவு நீர் நிரப்ப வேண்டும். 10 கிலோ மாட்டுச்சாணத்தை கொட்டி நன்கு கரைத்து கலந்துவிட வேண்டும். இந்த தொட்டியினுள் அரை அல்லது ஒரு கிலோ அசோலா விதைகளை தூவி கலந்துவிட வேண்டும். கிரசர் பொடி (கருங்கல் பொடி) அரை கிலோ பரவலாக தூவி கலக்கிவிட வேண்டும். ஒரு வாரத்தில் தொட்டி முழுவதும் அசோலா நிரம்பி வளர்ந்துவிடும். தினமும் 2 கிலோ அசோலா அறுவடை செய்யலாம். இந்த தொட்டியினை 50 சதவீதம் நிழல் கிடைக்கும் வகையில் மர நிழலில் அமைக்க வேண்டும்.
அறுவடை செய்த அசோலாவை சுத்தமான தண்ணீரில் அலசி எடுத்து மாடுகளுக்கு 2 கிலோ வரை தவிடு, புண்ணாக்குடன் கலந்துகொடுக்கலாம். ஆடுகளுக்கு 300 கிராம் முதல் 500 கிராம் வரை கொடுக்கலாம். கோழிகளுக்கு தேவையான அளவு கொடுக்கலாம். மீன் வளர்க்கும் குளத்தில் அசோலாவை தூவிவிடுவதன் மூலம் தேவையான அளவு உட்கொள்ளும் மீன்கள் குறைந்த காலத்தில் அதிக எடை கொண்டதாகவும் ஆரோக்கியமாகவும் வளரும். தூய்மையான முறையில் வளர்க்கப்பட்ட அசோலாவை மனிதர்களாகிய நாமும் பொரியல், வடை, சூப் என பல வகையில் உணவாக சமைத்து உண்ணலாம். நெல்வயல்களில் இந்த அசோலாவை தூவிவிடுவதன் மூலம் பத்து நாட்களில் வயல் முழுவதும் பரவி வளர்ந்துவிடும். மண்ணில் கலந்து மக்கும் பொழுது சிறந்த உரமாக பயன்படும். மற்ற தாவரங்கள் அனைத்திற்கும் உரமாக பயன்படுத்தலாம்.
உரத்தட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு பயன்பெறலாம். கால்நடைகளுக்கான உணவுத் தட்டுப்பாட்டிலிருந்தும் விடுபடலாம். செல்வச் செழிப்பினை அடையலாம்.
இத்தனை சிறப்புகள் கொண்ட அசோலா என்னும் நீலச்பச்சை பாசி, தாவரங்கள் முதல் அனைத்து உயிர் களுக்கும் மிகச்சிறந்த செலவில்லாத அற்புத உணவாகவும், மண்ணிற்கு உரமாகவும் பயன்படுகிறது.
எனவே விவசாயிகளும் ஆடு, மாடு, கோழி, ஈமு, புறா, மீன், மண்புழு வளர்ப்பு என பலரும் செலவில்லாத அசோலாவை வளர்க்கலாம். அப்துல் கலாமின் வல்லரசுக்கனவை நனவாக்கி நல்லரசு அமைக்கலாம். வளர்ப்பு குறித்த மேலும் விபரங்களுக்கும், அசோலா, வேலிமசால், கோ4, கோ.எப்.எஸ்.சோளம், கிளைரிசிடியா, சூபாபுல் (சவுண்டால்), அகத்தி போன்ற தீவன விதைகளும், சந்தனம், சிவப்பு சந்தனம், குமிழ், தேக்கு, மலைவேம்பு, மகோகனி போன்ற வனமர விதைகளும் கன்றுகளும், காய்கறி விதைகளும் ஆய்வுப்பண்ணை முகவரியில் நேரிலும் தபால் மூலமும் பெறலாம்.
ஆ.சந்தனமோகன், சந்தன வளர்ச்சி ஆய்வுப்பண்ணை, காமநாயக்கன்பாளையம், பல்லடம், கோயம்புத்தூர்-641 658.
**-ஆ.சந்தனமோகன், 98429 30674.**

## கோதுமை கொள்முதல்3.73 கோடி டன்னாக உயர்வு

ஜூன் 27,2012,03:35



புதுடில்லி:நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில், இதுவரையிலுமாக, மத்திய அரசின் கோதுமை கொள்முதல், 3.73 கோடி டன்னாக அதிகரித்துள்ளது.

இது, கடந்த ஆண்டு சந்தைப்படுத்தும் பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்முதலை விட, 35 சதவீதம் அதிகமாகும்.

கடந்த ஆண்டு இதே பருவத்தில், அரசின் கோதுமை கொள்முதல், 2.76 கோடி டன்னாக இருந்தது.

நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில் மத்திய அரசு, 3.20 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## யூரியாவிற்கான பற்றாக்குறை 1.10 கோடி டன்னாக அதிகரிக்கும்

ஜூன் 27,2012,03:33



புதுடில்லி:வரும் 2016-17ம் நிதியாண்டில், யூரியாவிற்கான பற்றாக்குறை 1.10 கோடி டன்னாக உயரும் என, இந்திய உர உற்பத்தியாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில், போதிய அளவிற்கு யூரியா உர உற்பத்தி இல்லாததால், தேவையை பூர்த்தி செய்ய நம்நாடு, வெளிநாடுகளிலிருந்து, யூரியாவை இறக்குமதி செய்து கொள்கிறது.தற்போதைய நிலையில், உள்நாட்டில், 2.20 கோடி டன், நைட்ரஜன் சார்ந்த ராசாயன உரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதேசமயம், இதற்கான தேவை, 2.80 கோடி டன் என்றளவில் உள்ளது. ஆக, பற்றாக்குறையான 60 லட்சம் டன் உர வகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.நடப்பு 12வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2012-2017), நாட்டின் யூரியா உர உற்பத்தியை, 3.37 கோடி டன்னாக உயர்த்த வேண்டும். இதற்காக, 40 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு மேற்கொள்ள வேண்டும் என திட்ட குழுவின், செயல்பாட்டுக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மகளிர் சுய உதவி குழு தயாரிப்புகளுக்கு தனி வணிக சின்னம்- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து -

ஜுன் 27,2012,03:28



மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களுக்கு, வர்த்தகப் பெயருடன், பிரத்யேக வணிக சின்னம் வழங்க, தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. மேலும்,"ஒரு கிராமம்-ஒரு பொருள்' என்ற திட்டத்தின் கீழ், கிராமங்கள் தோறும் தனி குழுக்களை அமைத்து, வேளாண் சாரா தொழிலாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோருக்கு ஸ்திரமான வேலைவாய்ப்புகளை வழங்கவும் முடிவு செய்துள்ளது.

தமிழகம்:இத்தகைய திட்டங்களால், தமிழக மகளிர் சுய உதவி குழுவினரின் தயாரிப்பு பொருட்களுக்கு, உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் வர்த்தக வாய்ப்பு பெருகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெண்கள் சுயசார்புடன் வாழவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் முதன் முதலாக, தனி அரசு அமைப்பை ஏற்படுத்திய மாநிலங்களில், தமிழகமும் ஒன்றாக விளங்குகிறது.

பெண்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தி, சேமிப்பை ஊக்குவிக்க, இத்திட்டம் உருவாக்கப்பட்டது. தமிழகத்தில், முதன் முதலாக, கடந்த 1991-92ம் ஆண்டு மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் துவங்கப்பட்டது. 20 ஆண்டுகளில், இந்த இயக்கம், தமிழகம் முழுவதும் வியாபித்து, விரிந்து பரந்த வளர்ச்சியைக் கண்டுள்ளது.

தமிழகத்தில் தற்போது "மகளிர் திட்டம்' என்ற திட்டத்தின் கீழ் 5.56 லட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்படுகின்றன. இவற்றில் 85 லட்சத்து 57 ஆயிரம் பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இதுவரை, சுயஉதவிக் குழுவினர், பல்வேறு வங்கிகளில் 15 ஆயிரத்து 633 கோடி ரூபாய் கடன் பெற்றுள்ளனர். அதே சமயம், இவர்களின் ஒட்டு மொத்த சேமிப்பு 3 லட்சத்து 375 கோடி ரூபாயாக உள்ளது.

நிதியுதவி:தமிழக அரசின் நிதியுதவியுடன் செயல்படும் இத்திட்டத்தின் கீழ், புதிய சுய உதவிக் குழுக்களை அமைத்தல், வங்கியில் கடன் பெறுதல், ஆற்றல் வளர்ப்பு பயிற்சி,சுழல் நிதி உருவாக்குதல், உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவது உள்ளிட்டவை மேற்கொள்ளப்படுகின்றன.

இக்குழுவினர் உருவாக்கும் பொருட்களின் தரத்தை நிர்ணயித்து, அரசின் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளின் சான்றிதழை பெற்றுத் தரும் நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

வெளிநாடு:மேலும், இப்பொருட்களுக்கு பிரத்யேக பெயர், வணிக சின்னம் ஆகியவற்றை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத னால், சுய உதவிக் குழுவினரின் பொருட்கள், உள்நாடு மட்டுமின்றி, வெளிநாடுகளிலும் போட்டியை சுலபமாக எதிர்கொண்டு, நுகர்வோரின் வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.நடப்பு 2012-13ம் நிதியாண்டில், சந்தை வாய்ப்புள்ள, மகளிர் சுய உதவிக் குழுவினரின் ஐந்து தயாரிப்பு பொருட்களுக்கு, தர நிர்ணய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படும்.

"ஒரு கிராமம்-ஒரு பொருள்' திட்டத்தின் கீழ், ஒரு கிராமத்தில் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருளைப் போன்று, வேறொரு கிராமத்தில் அதே பொருள் தயாரிக்கப்படும் பட்சத்தில், அக்குழுக்கள் ஒரு தொகுப்பாக ஒன்றிணைக்கப்படும். விரிவாக்கம்:இது, இக்குழுக்களிடையே தயாரிப்பு, விற்பனை, சந்தையை விரிவுபடுத்துவது, ஏற்றுமதி வாய்ப்பு உள்ளிட்டவற்றை ஒருங்கிணைக்க வழி வகுக்கும்.

இத்திட்டத்தின்படி, ஒரு மாவட்டத்திற்கு ஐந்து தொகுப்புகள் வீதம், 150 தொகுப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது, மாவட்ட அளவிலான விற்பனை மற்றும்

சந்தைப்படுத்தும் சங்கங்கள் மட்டுமே, சுயஉதவிக் குழு பொருட்களின் விற்பனையில் ஈடுபட்டுள்ளன. இதை மாநில அளவில் விரிவுபடுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதனால், மாநில அளவி லும்,தேசிய மற்றும் உலகளவிலும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களுக்கான வர்த்தகம் விரிவடையும். இக்குழுவினரின் வாழ்வாதாரமும் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தேயிலை ஏற்றுமதி 4 சதவீதம் சரிவு

ஜூன் 27,2012,03:22



புதுடில்லி:நடப்பு 2012ம் காலாண்டின் , ஜனவரி முதல் மார்ச் வரையிலான முதல் காலாண்டில், நாட்டின் தேயிலை ஏற்றுமதி, 4.38 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இது,முந்தைய ஆண்டின் இதே காலாண்டில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 4 சதவீதம் (4.58 கோடி கிலோ) குறைவாகும் என, தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.நம் நாட்டிலிருந்து, மத்திய கிழக்கு நாடுகள், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் போன்றவற்றிற்கு, தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது.மதிப்பீட்டு காலத்தில், நாட்டின் தென் மாநிலங்களிலிருந்து, மேற்கொள்ளப்பட்ட தேயிலை ஏற்றுமதி, 17 சதவீதம் குறைந்து, 1.74 கோடி கிலோவிலிருந்து, 1.44 கோடி கிலோவாக குறைந்துள்ளது. அதேசமயம், வட மாநிலங்களிலிருந்து, மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி, 4 சதவீதம் உயர்ந்து, 2.83 கோடி கிலோவிலிருந்து, 2.94 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.சென்ற 2011-12ம் நிதியாண்டில், இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி, அதற்கு முந்தைய நிதியாண்டை விட, 11 சதவீதம் குறைந்து, 21.49 கோடி கிலோ என்றளவிலிருந்து, 19.09 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது.

## உலக பால் உற்பத்தி 75 கோடி டன்னாக உயரும்

ஜூன் 27,2012,03:13



புதுடில்லி:இந்தியாவின் பால் உற்பத்தி அதிகரித்து வருவதால், நடப்பு 2012ம் காலண்டர் ஆண்டில், சர்வதேச பால் உற்பத்தி 3 சதவீதம் அதிகரித்து, 75 கோடி டன்னாக உயரும் என, ஐ.நா., உணவு மற்றும் வேளாண் அமைப்பு தெரிவித்துள்ளது.சென்ற 2011ம் ஆண்டில், சர்வதேச பால் உற்பத்தி 73 கோடி டன் என, இந்த அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது.

இது குறித்து, இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம்:

இந்தியா:சர்வதேச பால் உற்பத்தி உயர்விற்கு, ஆசிய நாடுகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகின்றன. குறிப்பாக, உலகளவில் பால் உற்பத்தியில் முன்னணியில் உள்ள இந்தியாவில் இதன் உற்பத்தி, நடப்பாண்டில், 52 லட்சம் டன்னில் இருந்து, 1 கோடியே 27 லட்சம் டன்னாக உயரும் என்று தெரிகிறது.

பிற நாடுகளில் காணப்படாத வகையில், இந்தியாவில் பால் உற்பத்தி பெருகி வருகிறது. சென்ற 2010-11ம் நிதியாண்டில், நாட்டின் பால் உற்பத்தி 12.10 லட்சம் டன்னாக இருந்தது. இது, சர்வதேச பால் உற்பத்தியில் 17 சதவீதம் என, தேசிய பால் பொருட்கள் மேம்பாட்டு வாரியம் :தெரிவித்துள்ளது.இந்தியாவில், நாளொன்றுக்கு தனி நபர் பால் பயன்பாடு, கடந்த 2009-10ம் நிதி ஆண்டில் 278 கிராம் என்ற அளவில் இருந்தது. இது, 2010-11ம் நிதி ஆண்டில் 281 கிராமாக உயர்ந்துள்ளது.

பால் பொருட்கள்நடப்பாண்டில், சர்வதேச அளவில், ஆண்டுக்கு, தனி நபர் பால் நுகர்வு 1.6 சதவீதம் அதிகரித்து, 106 கிலோவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, சென்ற 2011ம் ஆண்டில், 104.5 கிலோவாக இருந்தது. இதே ஆண்டுகளில், சர்வதேச பால் பொருட்கள் பயன்பாடு, 4 சதவீதம் உயர்ந்து 5.1 கோடி டன்னில் இருந்து, 5.27 கோடி டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.சீனா, இந்தோனேஷியா, சவூதி அரேபியா, கொரியா, சிங்கப்பூர்

ஆகிய நாடுகளிலும் பால் பொருட்களுக்கான தேவை பெருகும் என, உணவு மற்றும் வேளாண் அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வானூர் ஒன்றியத்தில் பயிர்வகை திட்டம் தோட்டக்கலை கூடுதல் இயக்குனர் ஆய்வு

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2012,00:56 IST

வானூர்:வானூர் ஒன்றியத்தில் பயிர்வகை திட்ட பணியையொட்டி தோட்டக்கலைத்துறை கூடுதல் இயக்குனர் முத்துசாமி ஆய்வு மேற்கொண்டார்.

தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தேசிய தோட்டக்கலை இயக்கம், துல்லிய பண்ணைய திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டங்களின் கீழ் வானூர் அடுத்த வினாயகபுரத்தில் பயிர்வகை திட்டப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விவசாயி ராமதாஸ் என்பவர் சாகுபடி செய்துள்ள "ரெட் லேடி' ரக பப்பாளி செடிகளையும், எடப்பாளையம் விவசாயி ஏழுமலை சாகுபடி செய்துள்ள பாலூர்-2 ரக கத்திரி செடி சாகுபடி, சேமங்கலம் கிராமத்தை சேர்ந்த சங்கர் சாகுபடி செய்துள்ள சப்போட்டா, ஜானகிராமன் சாகுபடி செய்துள்ள கொய்யா உள்ளிட்ட பயிர்களையும் மாநில தோட்டக்கலைத்துறை கூடுதல் இயக்குனர் முத்துசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் ராசு, உதவி இயக்குனர் ராஜாமணி, வானூர் உதவி இயக்குனர் அன்பழகன், ஒலக்கூர் உதவி இயக்குனர் கார்ல் மார்க்ஸ், உதவி வேளாண்மை அலுவலர்கள் ஜெயச்சந்திரன், பிரபு, தேவேந்திரன் உடனிருந்தனர்.

இதுகுறித்து கூடுதல் இயக்குனர் முத்துசாமி கூறுகையில்:ஆரோவில் வாட்டர் ஹார்வெஸ்ட் நிறுவனத்தின் திட்ட இயக்குனர் தண்டபானி ஏற்பாட்டின் படி இப்பகுதிகளில் 25 ஏக்கர் பரப்பில் பப்பாளி சாகுபடி செய்துள்ளனர்.

பப்பாளி சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை மூலம் மானியம் வழங்கப்பட உள்ளது.

வானூர் பகுதியில் பயிர்களுக்கு சாதகமான மண் வகைகள் இருப்பதால் சொட்டுநீர் பாசனத்தை பயன்படுத்தி சாகுபடி செய்தால் அதிக லாபம் பெறலாம் என்றார்.

## கால்நடை பராமரிப்பு துறை பணிக்கு ஆட்கள் தேர்வு

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2012,00:42 IST

விழுப்புரம்:அரசு கால்நடை பராமரிப்புத் துறையில் உதவியாளர் மற்றும் டிரைவர் பணிக்கு ஆட்கள் தேர்வு நடந்தது.விழுப்புரம் மாவட்டத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறையில், காலியாக உள்ள 99 கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணிக்கும், 6 டிரைவர்கள் பணிக்கும் ஆட்கள் தேர்வு நடக்கிறது. இந்த பணியிடங்களுக்கு 1:5 என்ற விகிதத்தில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பதிவு மூப்பு அடிப்படையில் பட்டியல் பெறப்பட்டது.

இதில் தனி ஒதுக்கீடாக 5 பணியிடங்களுக்கு முன்னாள் ராணுவத்தினரிடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. தேர்வுக்குழு தலைவர் கலெக்டர் சம்பத் தலைமையில் நேர்காணல் துவங்கியது.உதவியாளர் பணிக்கு தகுதிகளாக, 8ம் வகுப்பு தேர்ச்சியும், கால் நடைகளை கையாளுதல் அனுபவமும், 18 முதல் 35 வயதிற்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். டிரைவர் பணிக்கு பத்தாம் வகுப்பு தேர்ச்சியும், டிரைவிங் லைசன்சுடன் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். மாத சம்பளமாக 4800 ரூபாய் முதல் 14 ஆயிரம் ரூபாய் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் கலெக்டர் வளாகத்தில் உள்ள, கால்நடைத் துறை மண்டல இயக்குனர் அலுவலகத்தில் நேற்று காலை, முதற் கட்டமாக கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணிக்கான நேர்காணல் துவங்கியது. அழைப்பு கடிதம் பெறப்பட்ட 135 பேர் நேற்று நடந்த நேர்காணலில் கலந்து கொண்டனர்.

இவர்களிடம் தேர்வுக்குழு செயலர் கால்நடைத் துறை இணை இயக்குனர் அழகரசன் தலைமையில் உதவி இயக்குனர்கள் ராஜேந்திரன், குபேந்திரன், குருவய்யா, மோகன் உள்ளிட்ட அதிகாரிகள் நேர்காணல் நடத்தினர்.சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு, நேர் முகத்தேர்வு நடந்தது. கால்நடை பராமரிப்பு, வளர்ப்பு குறித்து கேள்விகள் கேட்கப்பட்டது.

மதிப்பெண்கள் அடிப்படையில் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.
தேர்வுக்குழு முடிவுகள், சென்னையில் உள்ள கால்நடைத் துறை ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து, இறுதி செய்து அறிவிக்கப்படுகிறது.
தொடர்ந்து 4 நாட்கள் உதவியாளர் பணிக்கும், 5ம் நாள் டிரைவர் பணிக்கும் நேர்காணல் நடக்கிறது.

## வேளாண் உதவி இயக்குனர் தகவல் துவரை சாகுபடி செய்யும் விவசாயிக்கு ரூ.15 ஆயிரம் மானியம்

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2012,01:59 IST

நாமக்கல்: நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் செல்வி வெளியிட்டுள்ள அறிக்கை:
நாமக்கல் வட்டாரத்தில், துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, வேளாண் துறை மூலம் மானியம் வழங்கப்பட உள்ளது. நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி, நாற்றங்கால் அமைத்து, துவரை செயல் விளக்கத்திடல்கள் அமைக்கும் விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேருக்கு, 15 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட உள்ளது.
அதற்கு, நீண்டகால ரகங்களான வம்பன் 2, கோ 6 ஆகிய ரகங்களை பயிரிட வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு, இரண்டு முதல் ஐந்து கிலோ விதை போதுமானது. இரண்டு சதவீதம் கால்சியம் குளோரைடுடன் விதை நேர்த்தி செய்து, ஏழு மணி நேரம் நிழலில் உலர வைக்கவும்.
பின், உயிர் உரங்களான ரைசோபியம் மற்றும் பாஸ்போபேக்டீரியா ஒரு கிலோ விதைக்கு, 50 கிராமுடன் விதை நேர்த்தி செய்யவும். வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்த, டிரைக்கோ டெர்மா விரிடி நான்கு கிராம் ஒர கிலோ விதையுடன் விதை நேர்த்தி செய்யவும்.
நேர்த்தி செய்த விதையை, நான்குக்கு இரண்டு என்ற அளவுள்ள பாலிதீன் பைகளில் இரண்டு விதைகள் விதைக்கவும். பாலிதீன் பைகளை ஒரு பாகம் செம்மண் ஒரு பாகம் மணல், ஒரு பாகம் மக்கிய தொழுவுரம் ஆகியவற்றை கலந்து முக்கால் பாகம் நிரப்பவும்.
பையின் அடிபாகத்தில் நீர் வடிவதற்கு மூன்று அல்லது நான்கு துளைகள் இட்டு, நீர் தேங்கா வண்ணம் பார்த்துக்கொள்ளவும். 30 முதல் 40 நாட்கள் வயதுடைய நாற்றுகளை வயலில் நடவு செய்யலாம். நடவு வயலில், ஐந்துக்கு மூன்று அடி இடைவெளியில், ஆறு இஞ்ச் குழி எடுத்து பாலிதீன் பையின் அடிபாகத்தை கிழித்து நடவு செய்யவும். 15 நாட்களுக்கு பின், நன்றாக வளரும் செடியை விட்டு விட்டு மற்றொரு செடியை களைந்தெடுக்கவும்.
நடவு செய்த 20- 30 நாட்களுக்குப்பின், செடியின் நுனியை கிள்ளுவதால் கிளைகள் எண்ணிக்கை அதிகமாகி மகசூல் அதிகரிக்கும். மேற்கண்ட தொழில் நுட்பங்களை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வாழையில் ஊடுபயிராக பூசணி, சேனை சாகுபடி

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2012,02:14 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில் வாழையில் ஊடுபயிராக பூசணி பயிரிடப்பட்டுள்ளது.
கோபி, கள்ளிபட்டி, கணக்கம்பாளையம், வாணிப்புத்தூர், டி.என்.பாளையம், சத்தி, அந்தியூர்,

அத்தாணி, ஆப்பக்கூடல், கொளப்பலூர், திங்களூர், சிறுவலூர், பெருந்துறை உள்ளிட்ட இடங்களில், 20 முதல் 25 ஆயிரம் ஏக்கரில் வெள்ளை பூசணி, சாம்பார் பூசணி மற்றும் சேனைக் கிழங்கு பயிரிடப்படுகிறது.
வெள்ளைப் பூசணி மற்றும் சாம்பார் பூசணி தனியாகவும், வாழையில் ஊடுபயிராகவும் பயிரிடப்படுகிறது. பூசணி, 90 முதல், 120 நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடும். ஏக்கருக்கு, 20 டன் பூசணி கிடைக்கிறது.
சேனைக் கிழங்கு எட்டு மாத பயிர். மஞ்சளில் அதிகளவில் ஊடுபயிர் செய்யப்படுகிறது. களிமண் பகுதியில் சேனை கிழங்கு நன்கு வளரும்.

சேனைக் கிழங்கு பத்து மாத பயிராக இருந்தாலும், ஏழு மாதத்தில் அறுவடைக்கு தயாராகி விடும். ஒரு ஏக்கரில், 15 முதல் 20 டன் கிழங்கு உற்பத்தியாகிறது.
கோபி வட்டாரத்தில் அறுவடை செய்யப்படும் வெள்ளை மற்றும் சாம்பல் பூசணி மற்றும் சேனைக் கிழங்குகள், தமிழகத்தில் தஞ்சாவூர், சென்னை, திருச்சி, கும்பகோணம் மற்றும் கேரளா, கர்நாடகா, துபாய் ஆகிய இடங்களுக்கு அதிகளவில் அனுப்பப்படுகிறது.

பூசணி மற்றும் சேனை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
வாழை விவசாயி ஒருவர் கூறியதாவது:
கோபி சுற்று வட்டாரத்தில் வெள்ளை பூசணி, சாம்பார் பூசணி தனியாகவும், வாழையில் ஊடுபயிர்கவும் பயிரிடப்பட்டுள்ளது. பூசணிக்கு களை எடுக்கும் பணி இல்லை. ஏக்கருக்கு 30 முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். 15 முதல் 20 டன் கிடைக்கும்.
வெள்ளை பூசணி ஒரு டன் 7000 ரூபாய்க்கு விற்பனையாகிறது. சிறிய காய் 5000 ரூபாய்க்கு கிடைக்கிறது.

சேனை கிழங்கு பயிரிட ஒரு ஏக்கருக்கு நான்கு டன் விதை இருந்தால் போதும், மூன்று மாதத்துக்கு பிறகு களை எடுத்து, இரண்டு மூட்டை பொட்டாஷ், இரண்டு மூட்டை டி.ஏ.பி., வைத்தால் போதும். வெறும் எந்த பணியும் செய்ய தேவையில்லை. ஏக்கருக்கு, 60 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். ஏக்கருக்கு, 15 முதல், 20 டன் கிடைக்கும்.
வாழை மற்றும் மஞ்சளில் செண்டுமல்லி ஊடுபயிராக செய்யலாம். ஒரு கிலோ பாக்கெட் செண்டுமல்லி விலை, 2,000 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.
ஏக்கருக்கு ஒரு கிலோ விதை பயன்படுத்தலாம். மாதம் இரு முறை மருந்து தெளிக்க வேண்டும். செண்டுமல்லி மூன்று மாத பயிர். அறுவடைக்கு தயாரான பின், எட்டு வாரங்கள் பூ அறுவடை செய்யலாம். கிலோ ஆறு ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம். ஏக்கருக்கு எட்டு டன் பூ கிடைக்கும்.

## கூட்டுறவு பால் பண்ணையில் நவீன தரப்பரிசோதனை கருவி

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2012,03:06 IST

அரியலூர்: அரியலூர் கூட்டுறவு பால் பண்ணையில் ஆட்டோ மேட்டிக் பால் சேகரிப்பு மிஷின் மற்றும் நவீன தரப்பரிசோதனை கருவிகள் துவக்கவிழா நடந்தது.
அரியலூர் கல்லூரி சாலையில் உள்ள கூட்டுறவு பால் பண்ணையில், பால் வளத்துறை சார்பில், மாவட்ட புனரமைப்பு திட்டத்தின்கீழ், ஒரு லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி பால் சேகரிப்பு இயந்திரம் மற்றும் நவீன தரப்பரிசோதனை கருவிகளை, அரியலூர் கலெக்டர் அனு ஜார்ஜ் துவக்கி வைத்தார்.
இந்நிகழ்ச்சியில் அரியலூர் மாவட்ட பால் வளத்துறை துணை பதிவாளர் கஸ்தூரிபாய், ராம்கோ சிமெண்ட் ஆலையின் துணை தலைவர் சண்முகம், மூத்த பொதுமேலாளர்கள் ராமலிங்கம், ராமராஜ், பொதுமேலாளர் ரவிச்சந்திரன், அரியலூர் தாசில்தார் முத்துவடிவேலு, தரக்கட்டுப்பாட்டு அலுவலர் மகேந்திரன், விரிவாக்க அலுவலர் சௌந்தர்ராஜன், கால்நடை டாக்டர் பழனியப்பன், அரியலூர் கூட்டுறவு பால் பண்ணை செயலாளர் இளங்கோவன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## வாழை விவசாயிகளுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூன் 27,2012,05:39 IST

ஸ்ரீவைகுண்டம்:ஸ்ரீவைகுண்டத்தில் வாழை விவசாயிகளுக்கு கிள்ளிகுளம் வேளாண்மை கல்லுரி மாணவிகளின் செய்முறை பயிற்சி நடந்தது.ஸ்ரீவைகுண்டம் புதுக்குடி பகுதியில் நடந்த பயிற்சி பட்டறையில் வாழை பயிரில் பணமாவாடலை கட்டுப் படுத்தவும் நூற்புழுவை கட்டுப்படுத்தவும் சூடோமோ னாஸ் பயன்படுத்துவதை குறித்து இளம் வாழை கன்றுகளின் வேர்களை நீக்கி களிமண் கரைசலில் மூழ்கி எடுக்க வேண்டும் ஒரு கன்றுக்கு 10 கிராம் அளவில் சூடோமோனாஸ்ஸை நன்றாக பரவும் விதம் தூவ வேண்டும் இவ்வாறு சிகிச்சை பெற்ற கன்றுகளை நட்டால் வாழையில் பனமா வாடலையும் நுற் புழு வையும் கட்டுப்படுத்தலாம். ஒரு ஹெக்டருக்கு 2.5 கிலோ சூடோமோனாஸ்ஸை 50 கிலோ தொழு உரத்துடன் கல ந்து கடைசி உழவின் போது நடலாம் வேளாண்மை கல் லுரி மாணவிகள் ஆயிஸா அபிராமி கலைவாணி சந்தியாவள்ளி சிவரஞ்சனி சியாமளாதேவி வினோதினி ஆகியோர் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர். 30 நாட்களில் முகாம் பேரின்பபுரம் பேரூர் சிவகளை பொன்னன்குறிச்சி புதுக்குடி பத்மநாமங்கலம் ஆகிய ஊர்களில் நடக்கிறது.